தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 9 **திகதி**: 23.11.2024

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு. தேவராசா

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	10	
வினா 2	20	
வினா 3	15	
வினா 4	15	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	2

பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.

1. படி (பெயர்): _____

_____

(வினை): _____

_____

2. காய் (பெயர்): _____

_____

(வினை): _____

_____

3. ஓடு (பெயர்): _____

_____

(வினை): _____

_____

4. ஊர் (பெயர்): _____

_____

(வினை): _____

_____

5. ஆடு (பெயர்): _____

_____

(வினை): _____

_____

6. புளி (பெயர்): _____

_____

(வினை): _____

_____

7. வழி (பெயர்): _____

_____

(வினை): _____

_____

8. முறை (பெயர்): _____

_____

(வினை): _____

_____

9. அறை (பெயர்): _____

_____

(வினை): _____

_____

10. மலர் (பெயர்): _____

_____

(வினை): _____

_____

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	4

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மொழியும் கலாசாரமும்

நாங்கள் தமிழர்கள். தமிழ்மொழியைப் பேசுவதனால் நாங்கள் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றோம். எனவே தமிழ்மொழி எங்களுடைய அடையாளம். நாங்கள் அவுஸ்த்திரேலியாவின் குடிமக்களாக அவுஸ்த்திரேலியாவில் வாழ்வதனால் அவுஸ்த்திரேலியத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றோம். நாங்கள் தமிழ்மொழியைப் பேசுகின்றோம். தமிழ்மொழியைக் கற்கின்றோம். அதேவேளையில் தமிழ்மொழி வழிவந்த தமிழ்க்கலாசாரத்தையும் பின்பற்றவேண்டும். கலாசாரம் என்பதைப் பண்பாடு என்றும் கூறலாம். கலாசாரம் அல்லது பண்பாடு என்றால் என்ன? ஒரு மனிதனுடைய உணவு, உடை, பழக்க வழக்கங்கள், மரபுகள், விழுமியங்கள், பண்டிகைகள் என்பவற்றை கலாசாரம் அல்லது பண்பாடு என்று கூறலாம். இந்த வகையில் தமிழ் மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் என்பவற்றைத் தமிழ்க்கலாச்சாரம் அல்லது தமிழ்ப்பண்பாடு என்று கூறலாம்.

தமிழ்மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச்சோறும், கறியுமாகும். தோசை, இடியப்பம், அப்பம், புட்டு, இட்லி போன்றன தமிழர்கள் உண்ணும் உணவுவகைகளாகும். தமிழர்களின் உடைகள் எவை? என்று பார்க்கின்றபோது ஆண்களுக்குரிய உடைகளாக வேட்டியும், சட்டையும் உள்ளன. ஆனால் பெண்களுக்குரிய உடைகள் அவர்களின் வயது நிலைகளுக்கேற்ப வேறுபடுகின்றன. சிறுமிகளுக்குரிய உடைகளாக முழுப்பாவாடையும், சட்டையும் அமைகின்றன. பக்குவம் அடைந்த பெண்பிள்ளைகளுக்குரிய உடைகள் பாவாடையும், தாவணியுமாகும். இளம் பெண்களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் உரிய உடைகளாக சேலையும், ரவிக்கையும் விளங்குகின்றன. பெற்றோர்களை மதித்தல், அவர்களின் சொற்கேட்டு நடத்தல், பெரியோர்களுக்கு மரியாதை கொடுத்தல், பெரியவர்களை பெயர் கூறி அழைக்காமல் உறவு முறைகளால் அழைத்தல், வயது முதிர்ந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்தல், விருந்தினர்களை வரவேற்று உபசரித்தல் போன்றன தமிழர்களின் பழக்க வழக்கங்களாகும். இப்பழக்க வழக்கங்களுடன் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளைக் கொண்டாடுதல், திருமணவிழா, பூப்புனித நீராட்டுவிழா (மஞ்சள் நீராட்டுவிழா), புதுமனை புகுவிழா (வீடு குடிபுகுதல்) போன்றவற்றை உற்றார், உறவினர்களை அழைத்துச் சிறப்பாகக் கொண்டாடுதல் என்பனவும் இணைகின்றபோது அவை தமிழர் விழுமியங்கள் எனப்படுகின்றன.

அவுஸ்த்திரேலியா என்ற சிறந்த பல்கலாசார நாட்டில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய கலாசாரத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புகளையும் மேற்கொள்ளாமல் மற்றவர்களின் கலாசாரத்தையும் மதித்து வாழவேண்டும். ஒரு நாட்டில் பல கலாசாரங்களைக் கொண்டமக்கள் ஒருவர் கலாசாரத்தை மற்றவர் மதித்து ஒற்றுமையாக வாழ்கின்றபோது அது பல்கலாசார நாடு என்று அழைக்கப்படுகின்றது. இதனையே வேற்றுமையில் ஒற்றுமை என்று கூறுவர். தைப்பொங்கல் தினத்தை தமிழர் திருநாளாக உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இந்தவருட ஆரம்பத்தில் தமிழ் வர்த்தக நிறுவனங்கள் அதிகம் உள்ள பென்டில் ஹில் நகரில் அதன் மத்தியில் அமைந்துள்ள பென்டில் வே வீதியை மறித்துப் பொங்கல்

பொங்கி நடாத்தப்பட்ட தைப்பொங்கல் விழாவுக்கு ஏனைய கலாசாரத்தைச் சேர்ந்த வர்த்தகர்களும் ஒத்துழைப்பும், பங்களிப்பும் செய்தார்கள். இது முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவிடயமாகும். இதுதவிர வெள்ளைக்காரப் பெண்களும், ஏனைய கலாசாரப் பின்னணியைக் கொண்ட சிலபெண்களும் சேலை, ரவிக்கை ஆகிய எமது கலாசார உடைகளை அணிந்து வருவதை பலநிகழ்வுகளில் கண்டுவருகின்றோம். தமிழ்க் கலாசார உணவு வகைகளின் காரத்தையும் (உறைப்பு) பொருட்படுத்தாமல் ஏனைய கலாசாரத்தைச் சேர்ந்த மக்கள் எமது உணவுகளை விரும்பி உண்பதைப் பார்த்து வியந்து போயிருக்கின்றோம். எனவே தமிழர்களாகிய நாங்கள் எங்கள் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களான எமது கலாசாரத்தையும், அதனோடு சம்பந்தப்பட்ட சிறந்த விடயங்களையும் திடமாகப் பின்பற்றுகின்ற வேளையில் மற்றவர் கலாசாரத்தையும் மதித்து வாழ்வோம்.

1. தமிழ் மாணவர்களாகிய உங்களின் அடையாளம் எது? (2 புள்ளிகள்)

_____

2. தமிழ்ப் பண்பாடு என்றால் என்ன? (3 புள்ளிகள்)

_____

_____

_____

_____

3. தமிழ்க் கலாசார அம்சங்களில் எல்லாவற்றையும் ஆண்களும், பெண்களும் ஒரேமாதிரியாகப் பின்பற்றுகின்ற போது ஒரு விடயத்தை மட்டும் வேறுமாதிரியாகப் பின்பற்ற வேண்டியுள்ளது. அது எது? அந்த விடயத்தைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

4. தமிழர் விழுமியங்கள் 5 எழுதுக. (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

5. அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக. (5 புள்ளிகள்)

1	தமிழர்களின் பிரதான உணவு	
2	பல்கலாசார நாடு	
3	உலகப் புகழ் பெற்ற தமிழர் பண்டிகை	
4	உங்களுக்கு விருப்பமான இரண்டு ஏனைய கலாசார உணவுகள்	
5	நீங்கள் கடைப்பிடிக்கும் இரண்டு தமிழ்ப்பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள்	

வினா இல	**3**	**புள்ளிகள்**	**15**	**பக்கம்**	**6**

பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

ஒரு வருடத்திற்கு முன்பு இதே கார்த்திகை மாதத்தில் வீட்டில் அப்பாவும், அம்மாவும், நானும், தம்பியும் பேசிக் கொண்டிருந்தோம். மார்கழி விடுமுறைக்கு நாங்கள் எங்கே போகப் போகின்றோம்? என்று தம்பி கேட்டான். ஆகாய மார்க்கமாக ஆகாய விமானத்தில் பல தடவைகள் பிரயாணம் செய்துள்ளோம். இம்முறை கடல்மார்க்கமாக கப்பலில் பிரயாணம் செய்வோமா? என்று நான் அப்பாவிடம் கேட்டேன். எல்லோருக்கும் விருப்பம் என்றால் ஆடம்பர பிரயாணிகள் கப்பலில் நான்கு அனுமதிச் சீட்டுகளைப் பதிவு செய்கின்றேன் என்றார். அனைவரும் சம்மதித்தார்கள்.

மார்கழி மாதத்தில் எமது பயணநாள் வந்தது. நாங்கள் சிட்னியிலுள்ள துறைமுகத்திற்குச் சென்று அலைகளின் அரசி என்ற பெயருடைய 3,000 பிரயாணிகள் பயணம் செய்யக்கூடிய பிரமாண்டமான கப்பலில் ஏறினோம். முதலில் கப்பலைச் சுற்றிப்பார்த்தோம். திரையரங்குகள், விளையாட்டு மைதானங்கள், உணவு விடுதிகள், விற்பனை நிலையங்கள் போன்ற பல்வேறு வசதிகளையும் உள்ளடக்கியதாக அக்கப்பல் அமைந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தோம்.

கப்பல் பிஜித்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கண்ணாடி யன்னலினூடாக கடலின் அழகையும், மீன்கள் துள்ளிப் பாய்ந்து மேலே வந்து மீண்டும் கடல் நீருக்குள் அமிழ்ந்து விடுகின்ற கண்கொள்ளாக் காட்சியையும் கண்டுகளித்தோம். கப்பலில் வேலை செய்பவர்கள் எங்களை நன்றாக உபசரித்தார்கள். சுவையான உணவு வகைகளைத் தந்தார்கள். இவ்வாறு மிகவும் மகிழ்ச்சியாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது திடீரென்று காற்றுப் பலமாக வீசியது. அமைதியாக இருந்த கடல் அலைகள் ஆர்ப்பரித்து எழுந்தன. கப்பல் முன்நோக்கிப் பிரயாணம் செய்யமுடியாமல் புயல் காற்றாலும், மரங்களின் உயரத்திற்குப் பாய்ந்து எழுந்த அலைகளாலும் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டது. பிரயாணிகள் அனைவரும் எப்போது என்ன நடக்குமோ? என்ற அச்சத்தில் ஆண்டவனை வேண்டியவாறு இருந்தனர். கப்பலின் அடிப்பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டு கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியது . . . . . .

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	8

பின்வரும் தொடர்வாக்கியத்திலிருந்து 15 தனிவாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.

செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி ஹோம்புஷ் ஆரம்ப பாடசாலையில் கூரை திருத்த வேலைகள் நடைபெற்றமையால் அங்கே வகுப்பு நடாத்த முடியாத நிலை ஏற்பட்டு நிகழ்நிலையில் (zoom) எமது வகுப்பு நடாத்தப்பட்டபோது ஆசிரியர் சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை விளக்கப்போவதாகக் கூறியவேளையில் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் வரலாற்றை முதலில் கூறமுடியுமா? என்று எனது தோழி இலக்கியா கேட்க ஆசிரியர் இளங்கோவடிகளின் வரலாற்றை முதலில் கூறியபின்பு சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதையைக் கூறத் தொடங்க நாங்கள் எல்லோரும் ஆர்வத்துடன் கதையைக் கேட்டு கண்ணகி என்ற கதாபாத்திரத்தின் படிமுறை வளர்ச்சியினால் கவரப்பட்டு கோவலனின் செய்கையினால் அவன் மீது கோபம் அடைந்து நீதி நெறிமுறை தவறிய பாண்டிய மன்னன் மீதும் கோபம் கொண்டு கோவலன் விண்ணுலகத்திலிருந்து தேவர்களுடன் வந்து கண்ணகியைச் சொர்க்கலோகத்திற்கு அழைத்துச்சென்றமையால் மகிழ்ச்சியடைந்து பல்வேறு உணர்வுகளை நாங்கள் அனுபவித்ததைத் தொடர்ந்து ஆசிரியர் கதைபற்றிய எங்களின் அபிப்பிராயத்தை எழுதுமாறு கூறினார்.

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	10

- நீங்கள் வாழ்கின்ற ஊரில் மழை பெய்தபின்பு வீதிகளில் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.
- வாரத்திற்கு ஒரு தடவை குப்பைகளை எடுக்கும்போது வீதிகளில் கொட்டிவிட்டு அதனைச் சுத்தமாக்காமல் சென்றுவிடுகிறார்கள்.
- சிறுவர் பூங்காவில் புல்வெட்டும் வேலைகள், துப்பரவாக்கும் வேலைகள் நீண்டகாலமாக நடைபெறவில்லை.

மேலே உள்ள பிரச்சனைகளை விரிவாகக் குறிப்பிட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்ரன்70@ஜிமெயில்.கொம் என்ற முகவரிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் மாநகரசபைத் தலைவர் திரு.அன்ரன் டேவிட் அவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	11

பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழ்மக்கள் கொண்டாடும் பண்டிகைகள்.
2. அவுஸ்த்திரேலியாவில் நான் சென்ற சுற்றுலா இடங்கள்.
3. "தமிழர்களின் உணவு வகைகளா? விரைவு உணவு வகைகளா? சிறந்தவை" என்ற தலைப்பில் நடைபெறவுள்ள பட்டிமன்றத்தில் நீங்கள் தமிழர்களின் உணவுவகைகள் தான் சிறந்தவை என்று பேசுகின்றீர்கள். அதற்காகத் தயாரித்த உரை.